# இவர்கள் வித்தியாசமானவர்கள்



மதுரை எல்லிஸ் நகரில் ஒரு கட்டடத்தில் ஓர் அறை. அந்த அறையில் பத்து குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன. சில தவழ்கிற பருவத்தில், சில தத்தித் தத்தி நடக்கிற பருவத்தில், சில இன்னும் தொட்டிலில். தொட்டிலில் இருக்கிற ஒரு குழந்தை அழ ஆரம்பிக்கிறது. உடனே நடக்கிற குழந்தை ஒன்று போய் தொட்டிலை மெல்ல ஆட்டுகிறது. கீழே தரையில் ஒரு கட்டெறும்பு, தவழ்ந்துகொண்டிருக்கிற குழந்தைக்கருகே ஊர்கிறது. இதைக் கவனித்த இன்னொரு குழந்தை கட்டெறும்பைக் கையிலே எடுத்துப்போய் அறைக்கு வெளியே போடுகிறது.

அத்தனையும் அனாதைக் குழந்தைகள், இவ்வளவு அழகான புத்திசாலியான குழந்தைகளைக்கூட அனாதைகளாக்கிவிட்டுப் போய்விடுகிற மனிதர்கள் இருக்கிறார்கள். ஆனால் க்ரேஸ் கென்னட் ஃபவுண்டேஷன் போன்ற சமூக சேவை அமைப்புக்களை நடத்துகிற மனிதர்களும் இருக்கிறார்கள் என்பது சற்று ஆறுதலான விஷயம்.

இந்த ஃபவுண்டேஷன் இரண்டு வருடங்களாக நடத்துகிற மழலை இல்லத்திலுள்ள அனாதைக் குழந்தைகளைத் தத்து எடுக்கிறவர்களுக்குத் தருகிறார்கள்; விற்பதில்லை. குழந்தைகளை அப்படித் தருவதற்கு முன்னால் தத்தெடுக்க விரும்புவோரைப் பற்றிய தகவல்களைத் திரட்டி அவர்கள் நம்பிக்கைக்குரியவர்களா என்று ஆராய்ச்சியும் செய்கிறார்கள்.



மழலை இல்லக் கட்டடம் அமைந்துள்ள காம்பவுண்டிலேயே ஒருகருணை இல்லம் அமைந்திருக்கிறது. இது தொழு நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்குமிடம். பிச்சைக்காரர்களாகத் திரிந்து கொண்டிருக்கிற தொழு நோயாளிகளைத் தினசரி ஒருமுறை இங்கே வரவழைத்து சிகிச்சை செய்கிறார்கள். நோய் நீங்கிய நிலையில் உள்ள பிச்சைக்காரர்களை மதுரைக்கு வெளியே உள்ள சிலோஹம் பண்ணையில் வேலைக்கனுப்பு கிறார்கள். தொழு நோயாளிகளைப் பிச்சைக்காரர்களாகவே வைத்திருந்து விடுதி கட்டித் தந்துக் குடியேற்றவைப்பது சரியல்ல என்ற அடிப்படையில் கருணை இல்லம் இப்படிப்பட்ட முயற்சியை மேற்கொண்டிருக்கிறது.

ஃபவுண்டேஷனின் மிக முக்கியமான பணி அதன் மருத்துவமனை தான். இந்த மருத்துவமனை "இருப்பவனிடம் வாங்கி இல்லாதவனுக்குக் கொடு" என்ற அடிப்படையில் இயங்குகிறது. எல்லிஸ் நகர் குடிசைவாசிகளுக்குப் பயன் தரும் இந்த மருத்துவமனையில் குடிசைவாசிகளுக்கென்று தனியான குறைந்த கட்டணமும் வசதியுள்ளோர்க்கென தனியான உயர்ந்த கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. மருத்துவ கவனிப்பு இரு சாரார்க்கும் ஒரே தரத்தில் வழங்கப்படுகிறதென நிர்வாகிகள் ஆணித்தரமாகச் சொல்கிறார்கள். இந்த மருத்துவமனையை ஒட்டி ஓர் ஆலோசனை நிலையம் அண்மையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இளைஞர்களின் பிரச்னைகளுக்கு, மணமானவர்களுக்கு Counseling centre ஆக இது உருவாக்கப்பட்டுள்ளது.

க்ரேஸ் கென்னட் ஃபவுண்டேஷன் நடத்தும் இந்தப் பணிகளுக்குப் பின்னணியில் ஆட்டுவிக்கிற சக்தியாக இயங்குகிறது மதுரை அரசரடியிலமைந்துள்ள தமிழ்நாடு இறையியற் கல்லூரி. ப்ராட்டெஸ்ட்டெண்ட் கிறித்துவப் பிரிவினரால் நடத்தப்படும் இக்கல்லூரி ஒரு வேதாகமக் கல்லூரி, மத அமைப்புக்களில் பணியாற்றும் குருமார்கள் இங்கே தான் உருவாகிறார்கள்.

பத்து வயது நிரம்பிய இக்கல்லூரி கிறித்துவம் பற்றிய மேனாட்டுப் பார்வையை நிராகரித்து, இந்திய மயமான கிறித்துவம் என்ற அடிப்படையில் இயங்குகிறது. இக்கல்லூரியில் படிக்கும் (குருமார்களாக வேண்டிய) மாணவர்கள் கென்னட் ஃபவுண் டேஷனின் சமூகப் பணிகளில் பங்கேற்று வழி நடத்துகிறார்கள்.

இறையியற் கல்லூரியோடு தொடர்புகொண்டு நடந்துவரும் மற்றொரு அமைப்பு வேலை தேடும் இளைஞர் கழகமாகும். மதுரை திருநகரில் அமைந்துள்ள இக்கழகம் வேலை தேடும் இளைஞர்களைத் தன் உறுப்பினர்களாகக் கொண்டிருக்கிறது. இக்கழகம் சொந்தமாக ஓர் அச்சகத்தை நிர்வகிக்கிறது. இந்த அச்சகம் அரசால் ஒரு பயிற்சி நிலையமாக அங்கீகரிக்கப்பட்டு இங்கே பயின்ற நூற்றுக்கணக்கான அச்சகத் தொழிலாளர்கள் வேறு அச்சகங்களில் பணிபுரிகிறார்கள். மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதை ஒரு பணியாகக் கொண்டுள்ள இக்கழகம் 'அவசரம்' என்ற தலைப்பில் ஒரு சிறு பத்திரிகை நடத்துகிறது.

இன்ப இல்லம், அருளகம் என்ற இன்னும் இரண்டு அமைப்புக்களும் இறையியற் கல்லூரியின் ஆலோசனையோடு இயங்கிவருகின்றன. இன்ப இல்லம் ஆதரவற்ற முதியோர்களுக்கான இல்லமாகும். இங்குள்ள முதியோர்கள் தாங்களே சமையற் பொறுப்பை மேற்கொண்டு, ஓய்வு நேரத்தில் பாய்கள் வேய்ந்தும் ஜீவிக்கின்றனர். அருளகம் இளமையிலேயே சமூகக் கொடுமைகளுக்காளான பெண்களின் புகலிடமாக விளங்குகிறது.

அருளகத்தில் புகலிடம் தேடும் பெண்கள் காதலனால் கைவிடப்பட்டவர்கள், பெற்றோருடன் சச்சரவினால் வீட்டிலிருந்து ஓடிப்போய் விபசார விடுதிகளில் சிக்கியவர்கள் எனப் பல வகையினராக இருக்கிறார்கள். இவர்களை மீட்டுவர அருளகத்தினர் பல முறை விபசார விடுதிகளின் போக்கிரிகளுடனும் சிலசமயம் சட்டத்துடனும் போராட வேண்டியிருக்கிறது.

இங்குள்ள பெண்கள் கைவினைப் பொருட்களைத் தயாரிக்கிறார்கள். தறி போடுகிறார்கள். பாய் வேய்கிறார்கள். சில அபூர்வமான தருணங்களில் திருமணமாகி அருளகத்திலிருந்து வெளியேறுகிறார்கள். இந்தப் பெண்களைத் திருமணம் செய்ய முன்வருகிறவர்களில் பலர் பின்னர் அவர்களை அழைத்துப்போய் விபசாரத்தில் ஈடுபடுத்தக்கூடியவர்களாயும் இருப்பதனால் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டியிருக்கிறது என்கிறார்கள் நிர்வாகிகள்.

அடிப்படைகளிலேயே கோளாறுகள் அமைந்துள்ள ஒரு சமூக அமைப்பில் இப்படிப்பட்ட சமூக சேவையினால் பிரச்னைகள் தீர்ந்துவிடுமா? இல்லை சமூக அமைப்பு மாறிவிடுமா? நிச்சயமாக இல்லை. இதனால் இந்தப் பணிகள் அவசியமில்லை என்பதல்ல. இந்தப் பணிகள் உடனடியான குறைந்தபட்சத் தீர்வுகளைத் தர நடக்கும்போதே தொலை நோக்கோடு நிரந்தரமான தீர்வுக்கும் உழைத்தாக வேண்டும்.

இந்த உண்மையை இறையியற் கல்லூரியினர் உணர்ந்திருக்கிறார்கள். வெறுமே ஆதரவளிப்பது, நன்கொடைகள் வழங்குவதெல்லாம் போதாது. தங்கள் பிரச்னைகளுக்குக் காரணம் என்ன என்பதை மக்கள் உணர்ந்து விழிப்புணர்வு பெற்று செயல்படவேண்டும் என்று புரிந்திருப்பதால், பிறந்த அமைப்புதான் கிராமிய இறையியல் நிறுவனம் **(Rural Theological Institute).**

மதுரை நகருக்கு வெளியே அவனியாபுரத்துக்கருகே குசவன் குண்டு என்ற கிராமத்தில் பெத்தேல் பண்ணையில் இருக்கிறது ‘கிராமிய இறையியல் நிறுவனம்’. முதியோர் கல்வித் திட்டத்தில் ஓர் அங்கீகரிக்கப்பட்ட நிலையமாக இது இருக்கிறது. இங்கே இறையியற் கல்லூரி மாணவர்களில் சிலர் தங்கியிருந்து கிராமவாசிகளோடு நேரடி தொடர்புகொள்ளுகிறார்கள். வலையப்பட்டி, பாப்பானோடை, சின்ன உடைப்பு, குசவன் குண்டு. தொட்டியப்பட்டி, ஒத்த ஆலங்குளம், பெரிய ஆலங்குளம், கம்பக் குளம், ராமன் குளம் என்று சுற்றியுள்ள கிராமங்களில் நிறுவனத்தின் ஊக்குநர்களும், மாணவர்களும் பணியாற்றுகின்றனர்.

இங்குள்ள பால் விவசாயிகள் தங்கள் பாலை இடைத்தரகர்களிடம் விற்று மேலும் மேலும் கடனாளியாக இருந்த நிலையை மாற்ற அவர்களை ஒன்றுபடுத்திக் கூட்டுறவு சொசைட்டிகளை ஏற்படுத்த முயற்சி நடந்தது. இந்த முயற்சியை இடைத்தரகர்கள் தடுத்தனர். உதவி தருவதாகச் சொன்ன வங்கியும் கடைசி நிமிடத்தில் கைவிட்டது. (விசிட்டர் 01-02-1980 இதழில் இதுபற்றிய கட்டுரை வெளியாயிற்று). ஆனால் ஒன்று திரட்டப்பட்ட மக்கள் உறுதியாக நின்றதாலும் விசிட்டர் கட்டுரைக்குப் பின், வங்கிகள் கடன் வழங்கின. இப்போது கூட்டுறவு சொசைட்டி நிறுவப்பட்டுள்ளது.

இதேபோல் இடைத்தரகர்கள் பிடியில் சிக்கித் தவிக்கும் சுமார் பத்தாயிரம் மல்லிகைப் பூ விவசாயிகளை ஒன்று திரட்டும் முயற்சியில் நிறுவனத்தின் ஊக்குநர்கள் முனைந்துள்ளனர். கிராம மக்களிலேயே விழிப்புணர்வு பெற்ற இளைஞர்கள் இதிலே ஆர்வத்தோடு உழைக்கின்றனர்.

வறட்டுப் பிரசாரத்தினால் மக்களிடையே சமய நம்பிக்கையை, கடவுள் பக்தியை ஏற்படுத்தவும் முடியாது; அகற்றவும் முடியாது. மக்களின் அன்றாடப் பிரச்னைகளையும் சமூகச் சூழலையும்

கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் இறையியலும், அரசியலும் இருக்க முடியாது. ஒருபுறம் சேவையும் மறுபுறம் அடிப்படைச் சமூக அமைப்பின் மாற்றத்துக்கான உழைப்பிலும் ஈடுபடுவதில் தான் மக்களின் உண்மை மகிழ்ச்சிக்கு வழி வகுக்க முடியும். இந்த உண்மைகள் உணர்ந்த திசையில் இறையியற் கல்லூரி முதலடி எடுத்து வைத்திருக்கிறதெனலாம்.

விசிட்டர்

**01-06-1980**